**செய்தி வெளியீடு எண் :1325** **நாள் : 04.08.2022**

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

## சென்னை நேரு விளையாட்டரங்கத்தில் நட்பு ரீதியிலான கால்பந்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சிவ. வீ. மெய்யநாதன் அவர்கள் வழங்கினார்.

44- வது செஸ் ஒலிம்பியாட் -2022 போட்டி மாமல்லபுரத்தில் கடந்த ஜூலை 28- ந்தேதி தொடங்கி சிறப்புடன் நடைபெற்று வருகிறது. வருகிற ஆகஸ்ட் 10- ந்தேதி முடிவடைய உள்ள இந்தப் போட்டியில் 187- நாடுகளைச் சார்ந்த வீரர்கள் பங்கேற்று விளையாடி வருகின்றனர் .

செஸ் ஒலிம்பியாட் போட்டியின் ஓய்வு நாளான இன்று (04.08.2022) வீரர் - வீராங்கனைகளை உற்சாகப்படுத்துகின்ற வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், அகில இந்திய செஸ் கூட்டமைப்பு மற்றும் சென்னையின் புட்பால் கிளப் இணைந்து நட்பு ரீதியிலான கால்பந்து போட்டியினை சென்னை நேரு விளையாட்டு அரங்க மைதானத்தில் நடத்தின.

60- க்கும் மேற்பட்ட வீரர்கள் , நிர்வாகிகள் பங்கேற்ற லீக் போட்டியில் ஆப்ரோ அமெரிக்கா அணி (Afro America) முதலிடம் , பிடே அணி (FIDE) இரண்டாமிடம் , யூரோப் அணி ( Europe) மூன்றாமிடம், இந்திய அணி நான்காமிடம் பெற்றன.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சிவ. வீ. மெய்யநாதன் அவர்கள் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய முதன்மை செயல் இயக்குநர் / உறுப்பினர் செயலர் டாக்டர் கா.ப.கார்த்திகேயன் , இ.ஆ.ப. அவர்கள் , கிராண்ட் மாஸ்டர் திரு. விஸ்வநாதன் ஆனந்த் அவர்கள் மற்றும் அலுவலர்கள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் திரு. அரவிந்தன் இ.கா.ப. அவர்கள், பிடே தலைவர் திரு. ஆர்க்டே துவர்கோவிச், அவர்கள் , தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத்தலைவர் டாக்டர் .அசோக் சிகாமணி ஆகியோர் விளையாடினர் .

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in